## இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 பிப்ரவரி மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 28.02.2019 ந் தேதி காலை 11.25 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:–

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் பிப்ரவரி 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.834**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் பிப்ரவரி 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.835**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 3**

இராமநாதபுரம் நகராட்சி, இயற்கை இடர்பாடுகள் மற்றும் குடிநீர் விநியோகம், வறட்சி கால நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் கண்காணிப்பு (Monitoring Officer)அலுவலர் அவர்களின் 25.01.2019–ம் தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி கீழ்கண்டுள்ள திறந்தவெளிக் கிணறுகள் தூர்வாரி ஆழப்படுத்துதல் மற்றும் தூர்ந்து போன ஆழ்துளைக் கிணறுகளை சுத்தம் செய்து (Flushing of Borewells) பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்திரவிடப்பட்டுள்ளார்கள்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள நீலகண்ட ஊரணி கிணறு, முகவையூரணி, பிள்ளையாளர் கோவில் அருகில் உள்ள கிணறு, பெரியார் நகர் நொச்சிவயல் ஊரணியில் உள்ள கிணறு, மற்றும் லட்சுமிபுரம் கிணறுகளில் தூர்வாருதல் மற்றும் பராமரிப்புக் பணிகள் செய்தல் மற்றும் சிதம்பரம் பிள்ளை ஊரணியில் புதிய | 7.00 |

| | | |
|---|---|---|
| | 4.00 மீ.விட்டமுள்ள கிணறு அமைத்தல் | |
| 2 | இராமநாதபுரம் நகராட்சிகுட்பட்ட 20 இடங்களில் ஆழ்துளை கிணறுகளை(Flushing of Borewells) சுத்தம் செய்து கொடுக்கும் பணி | 3.00 |

மேற்கண்ட பணிகளை குடிநீர் நிதி 2018–19ன் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இப்பணி குடிநீர் விநியோக பணி என்பதினால் நகர்மன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோருவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.361/2019/இ1

**<u>தீர்மானம் எண்.836</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் 4</u>

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் பராமரிப்பு பிரிவில் பணியாற்றி வரும் கீழ்க்கண்ட பணியாளர்கள் தாங்கள் பணியேற்ற நாள் முதல் காலமுறை ஊதியம் வழங்க கோரி தொழிலாளர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததில் 11.06.2014–ல் நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதை ஆட்சேபித்து தொழிலாளர் நீதி மன்றம் மதுரையில் 07.03.2016–ந் தேதி மேல்முறையீடு செய்யப்பட்டது. மறு பரிசீலனை செய்ய வேண்டி 9 நபர்களுக்கு I-A பெட்டிசன் ரூ.1,800 /– வீதம் ரூ.16,200/– வழக்கறிஞர் திரு.கண்ணன் என்பவருக்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.837</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் 5</u>

இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்த அரசாணை நிலை எண்–21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள்.05.02.2019–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன் முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் அரசாணை எண்.21 மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.05.02.2019 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.2545/2017/எப்1

**<u>தீர்மானம் எண்.838</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் 6</u>

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை 2018–2019, Pumping Station Zone IVல் (இந்திரா நகர்) சேகரம் ஆகும், பாதாள சாக்கடை கழிவு நீர் தொட்டியில் உள்ள மின் மோட்டார் 75HP மற்றும் 40HP 2–எண்ணம் பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி மேற்கொள்ளும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.3.80/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)இப்பணி பாதாள சாக்கடை திட்ட என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரி குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று கொள்ளப்பட்டு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்க வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.524/2019/இ1

**<u>தீர்மானம் எண்.839</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் 7</u>

இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவு, பாதாள சாக்கடை திட்டம், மற்றும் குடிநீர் கேட்பினை பதிவேற்றம் செய்வதற்கும், தினசரி அறிக்கைகள் தயார் செய்வதற்கும் கணிணி பயன்பாட்டிற்கும் தனியாக ஆட்கள் இல்லாததால் சிரமம் ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 1 நபரை அமர்த்தி கொள்ளவும், அதற்குரிய ஏற்படும் செலவினம் ரூ.1.20/- லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணியாளர் அமர்த்தும் பணிக்கு வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.418 /2019/இ1

**<u>தீர்மானம் எண்.840</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி–2018–19, நகராட்சி பராமரிப்பில் உள்ள நீலகண்ட ஊரணி கிணறு, முகவையூரணி கிணறு, முகவையூரணி பிள்ளையார் கோவில் அருகிலுள்ள கிணறு பெரியார் நகர் நொச்சிவயல் ஊரணியில் உள்ள கிணறு, மற்றும் லட்சுமிபுரம் கிணறுகளில் துார் வாறுதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்தல் மற்றும் சிதம்பரம் பிள்ளை ஊரணியில் புதிய 4.00 மீ விட்டமுள்ள கிணறு அமைக்கும் பணிக்கு 15.02.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 7,00,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 7,00,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 361/2019/இ1

**<u>தீர்மானம் எண்.841</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி–2018–19, நகராட்சிக்குட்பபட்ட 20 இடங்களில் ஆழ்துளை கிணறுகளை (Flushing of Bore Wells) சுத்தம் செய்து கொடுக்கும் பணிக்கு 15.02.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 3,00,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 3,00,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு– 1)</u> மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 361/2019/இ1

**<u>தீர்மானம் எண்.842</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சி 2017–18ஆம் ஆண்டிற்கு கணக்கு தயார் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கணக்கு தயார் செய்து ஒப்படைத்த திரு.வி.சீனிவாசன் பட்டய கணக்காளர் அவர்களுக்கு ரூ.50,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு.எண்.2526/2018 /பி1

**<u>தீர்மானம் எண்.843</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 11</u>**

இராமநாதபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் குடிநீர் பயன்பாட்டிற்கு தற்போது உள்ள Reverse Osmosis (RO) Plant பயனற்ற நிலையில் உள்ளது. எனவே புதியதாக Reverse Osmosis (RO) Plant வாங்கி பயன்படுத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,25,000/—த்திற்கு குடிநீர் நிதியின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2019/இ1

**<u>தீர்மானம் எண்.844</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் 12</u>

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி—2018—19, புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் அமையப்பெற்றுள்ள திறந்த வெளி கிணற்றினை தூர்வாரி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தும் பணிக்கு 08.02.2019—ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 2,70,000/— | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 2,70,000/— | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு—</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்.845**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி–2018–19, வார்டு எண் 8, காட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிக்கு 08.02.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 50,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 50,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 69/2019/இ1

**தீர்மானம் எண்.846**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 14</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய்நிதி 2018–19, பொறியியல் பிரிவில் கணிணி பதிவேற்றம் செய்யும் பணியாளர் அமர்த்தும் பணிக்கு 14.02.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.கே.சத்தியநாதன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 1,20,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எம்.கே.திருமுருகன்<br>ஒப்பந்ததாரர்,<br>எண்.26 வடக்கு புதுத் தெரு,<br>இராமநாதபுரம். | 1,20,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.சத்தியநாதன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணியாளர் அமர்த்தும் பணிக்கு வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 418/2019/இ1

**<u>தீர்மானம் எண்.847</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 15</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இவற்றில் கழிவு நீர் குழாய்கள் அதற்குரிய வால்வுகளில் அடைப்புகள் ஏற்பட்டு பழுதுகள் ஏற்படுகின்றது. மேலும் பிரதான மெயின் குழாய்களில் அடைப்புகள் ஏற்படாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் கால முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மேலும் மனித ஆய்வு குழிகளில் சேகரம் ஆகியுள்ள கழிவு மண்ணை அவ்வப்பொழுது அகற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள பணியாளர்கள் இல்லாததால் வெளி நபர்களை பயன்படுத்தி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.848</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 16</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2018–19, புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு அறையில் (Passenger Waiting Shed) சேதங்கள் ஏற்பட்டுள்ளதை சரி செய்வதற்கு மராமரத்து செய்து புதிய Tiles அமைக்கவும், மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து ஜன்னல்களுக்கு Sunshed Slab அமைக்கவும் மற்றும் நடை பாதையில் ஓட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை அகற்றி புதிய வர்ணம் பூசவும் அதற்கான பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.420 /2019/இ1

**<u>தீர்மானம் எண்.849</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 17</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில், பொது சுகாதாரப்பணி மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிக்க பயன்படுத்தப்படும் மற்றும் வணிக நிறுவனங்கள் மீன் மார்க்கெட் ஆகிய பகுதிகளில் சேரும் குப்பைகளை தினசரி அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தி வந்த மினிடிப்பர் லாரி மஸ்தா வாகனம் தகுதிச்சான்று பணிக்காக 14.01.2019 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. மேலும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெறுவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,80,000/–க்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>–** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.628/2019/எச்1

**<u>தீர்மானம் எண்.850</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்(கூ. பொ)
இராமநாதபுரம் நகராட்சி